**DEPOSITION OF WITNESS**

**In the Court of Judicial Magistrate No.II, Mettur**

**Case No : C.C.183/2022**

**Prosecution witness : அ.சா. 9** **Date : 20.12.2024**

| Name : சண்முகம் | Caste : |
|---|---|
| Father's Name : | Calling : |
| Village : | Religion : |
| Taluk : | Age : |

**முதல் விசாரணை**

1) நான் தற்பொழுது ஆத்தூர் வட்டம் தம்பம்பட்டி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 2022–ம் வருடம் மேச்சேரி காவல் நிலையத்தில் காவல் ஆய்வாளராக பணிபுரிந்த போது, கடந்த 15.02.2022–ம் தேதி காலை 11.30 மணிக்கு இவ்வழக்கில் சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ரகுபதி அவர்கள் நிலையப்பொறுப்பில் இருந்தபோது, மேட்டூர் அரசு மருத்துவமனையிலிருந்து கிடைக்கப்பெற்ற காயத்தகவலின் பேரில் அங்கு சென்று உள்நோயாளியாக இருந்த கோவிந்தராஜ், த/பெ.கோபாலன் என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து நிலையம் வந்து வாக்குமூலத்தின் தன்மைக்கு ஏற்ப மேச்சேரி காவல் நிலைய குற்றஎண்.78/2022 ச/பி 147, 148, 323, 324, 506(2) இதச பிரிவில் வழக்கு பதிவு செய்தார். முதல் தகவல் அறிக்கை **அ.சா.ஆ.5** ஆகும்.

2) பிறகு வழக்கு கோப்பை பெற்ற நான் கடந்த 15.02.2022 ம் தேதி மதியம் 12.30 மணிக்கு சம்பவயிடமான திப்பரத்தம்பட்டி காட்டுவளவு வாதி விவசாய நிலத்தின் அருகே சாட்சிகள் பழனிசாமி மற்றும் அன்பழகன் ஆகியோர் முன்னிலையில் மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். பார்வை மகஜர் **அ.சா.ஆ.6** மற்றும் **மாதிரி வரைப்படம் அ.சா.ஆ.7 ஆகும்.**

3) இவ்வழக்கில் சாட்சிகள் கோவிந்தராஜ், நேதாஜி, மாலதி, குமார், சின்னகண்ணு, அலமேலு, சசிகலா, பழனிசாமி, அன்பழகன், மருத்துவர் சுக்ரிதா,

சிறப்பு காவல் உதவி ஆய்வாளர் ரகுபதி ஆகியோர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். இவ்வழக்கில் காயம்பட்ட கோவிந்தராஜ் என்பவருக்கு சிகிச்சை அளித்த மருத்துவர் சுக்ரிதா என்பவரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்து விபத்து பதிவேடு பெற்றேன். இவ்வழக்கின் எதிரிகள் 1 முதல் 5 வரையுள்ளவர்கள் கடந்த 03.03.2022ம் தேதி மதிப்புமிகு மாவட்ட முதன்மை நீதிமன்றம், சேலத்தில் முன்ஜாமின் பெற்றதால் கைது செய்ய மார்க்கம் இல்லை.

4) இவ்வழக்கின் சாட்சிகளை விசாரித்த பிறகு, குற்றத்தன்மை உண்மை என தெரியவந்ததால் வழக்கு தன்மைக்கேற்ப சாட்சிகளின் விசாரணைக்கேற்ப புலன் விசாரணையை முடிவு பெற்ற பிறகு எதிரியின் மீது கடந்த 10.03.2022-ம் தேதி குற்றஎண்.133/2014 குற்றஎண்.78/2022 ச/பி 147, 148, 323, 324, 506(2) இதச பிரிவில் இருந்து ச/பி 294(பி), 147, 148, 325, 324, 506(2) இதச பிரிவில்ன் படி குற்றப்பத்திரிக்கை தாக்கல்செய்தேன். பிரிவு மாறுதல் அறிக்கை **அ.சா.ஆ.8** ஆகும்.

<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை-இல்லை.</u>

ஒம்/- தே.மயில்சாமி
குற்றவியல் நீதித்துறை நடுவர் எண்.2
மேட்டூர்.